Indvl-copy

<u>தமிழ்நாடு பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள், சென்னை—28</u>

<u>முன்னிலை: திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப.,</u>

<u>எண்.14014/கே2/2023 நாள்.07.03.2025</u>

பொருள் பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – தாம்பரம் பதிவு மாவட்டம் – கருணை அடிப்படையில் 19.07.2024 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.M.புவனேஸ்வரி என்பவரின் பணியை வரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

பார்வை

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020
2. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை நாள்.08.03.2023
3. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.14014/கே2/2023 நாள்.16.07.2024
4. மாவட்டப்பதிவாளர், தாம்பரம் கடித எண் 5317/அ1/2024 நாள்.03.01.2025

---

ஆணை:

பதிவுத்துறையில், தென்சென்னை பதிவு மாவட்ட 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகையில் 07.07.2022 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி.P.தேவகி, என்பவரின் மகள் திருமதி.M.புவனேஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரி 14.10.2022 நாளிட்டு அளித்த விண்ணப்பம், மற்றும் கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள் / ஆவணங்கள் / முன்மொழிவுகள், நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை திருமதி.M.புவனேஸ்வரி பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரது நடவடிக்கைகளின் படி தாம்பரம் பதிவு மாவட்டத்தில் பணிநியமனம் வழங்கி ஆணை வழங்கப்பட்டது, அதனையடுத்து திருமதி.M.புவனேஸ்வரி, 19.07.2024 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

(த.பி.பா)

பார்வை (2)-ல் காணும் அரசாணையின் விதி 16-ல் பணியில் சேர்ந்த ஓராண்டுக்குள் கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவரின் பணியினை நியமன அலுவலரே வரன்முறைபடுத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது,

திருமதி.M.புவனேஸ்வரி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 19.07.2024 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவரது பணியை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

திருமதி.M.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளரின் பணிவரன்முறை செய்யப்பட்டது தொடர்பான பதிவுகளை அவரது பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறும், தனியரது அசல் சான்றுகளை மீள பெற்று கொண்டதற்கு ஒப்புதல் அனுப்பவும் தாம்பரம் மாவட்டப்பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/-07.03.2025
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

17/3/2025
மாவட்டப்பதிவாளர்

11/03/25

பெறுநர்
திருமதி.M.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளர்.
மாவட்டப்பதிவாளர் அலுவலகம், தாம்பரம்.
(தாம்பரம் மாவட்டப்பதிவாளர் மூலம்)
நகல்

1. மாவட்டப்பதிவாளர், தாம்பரம்,
   கீழ்கண்ட அசல் சான்றுகளுடன்
   1) S.S.L.C மதிப்பெண் சான்று பதிவு எண்.746088/மார்ச் 2009
   2) வகுப்பு சான்றிதழ், சான்று எண்.8476751 நாள்.22.06.2009
2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
3. முக்கிய ஆணைக் கோப்பு / தனிநகல்-1.